**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 26-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**இடைக்கால மனு எண்.2/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.10/2021**

ஜோதிமணி ... மனுதாரர்/வாதி

**... எதிர் ...**

1.சேர்வாரன்
2.காளியம்மாள்
3.முத்துசெல்வம் .... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 15.09.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.வீரமுத்து அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் கட்டளை 6 ரூல். 16, 17 உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

தாவா வழக்கானது எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் எதிர்கோருரிமை மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்கோருரிமை மனுவில் தஸ்தாவேசு விபரத்தில் 20.04.1965 ல் ஒத்திபத்திரமும், 24.10.1968 ல் மேல் ஒத்திபத்திரமும், 01.08.1973 ல் ஒத்தி மேடோவர் பத்திரமும், 31.08.1978 ல் ஒத்தி மேடோவர் பத்திரமும் தாக்கல் செய்து உள்ளார்கள் என்றும் மேற்படி நான்கு பத்திரங்களும் பெயரளவில்

எழுதப்பட்டுள்ளது தவிர அது நடைமுறைக்கு வரவில்லை என்றும், சொத்தின் சுவாதீனத்தை எடுத்து ஒத்திதாரர் அனுபவம் செய்யவில்லை என்றும், ஒத்தியும் நடைமுறைக்கு வராததால் மேற்படி ஒத்திபத்திரமும் செல்லத்தக்கதல்ல என்றும் மேற்படி ஒத்தி பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மறுப்புரையின் சுருக்கம்:-

எதிர்கோருரிமையாளர்களிடமிருந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக 02.05.2013 ம் தேதி ஒரு கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்து கொண்டு அதனடிப்படையில் பட்டா பெயர் மாறுதலை 03.11.2020 ம் தேதி ஏற்படுத்திக்கொண்டு தாவா வழக்கை தங்கள் மீது தாக்கல் செய்துள்ளனர் என்றும், தொடர்ந்து நீடனுபோக பாத்திய உரிமையில் தாங்கள் அனுபவம் செய்துவரும் நிலையில், மேற்படி கிரைய பத்திரமானது சட்டப்படி செல்லுபடி ஆகக்கூடியதில்லை என்றும், அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் உரிமைமூல ஆவணங்களை தாக்கல் செய்யாமலும் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தங்களால் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து Null and Void பரிகாரம் கோர மனுதாருக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் கிடையாது என்றும் மேலும் 31.08.1978 முதல் ராஜம்மாள் தொடர்ந்து ஒத்தி மேடோவர் பெற்று அனுபவம் செய்து வருவதாலும், 20.04.1965, 24.10.1968, 01.08.1973 ஆகிய தேதிய ஆவணங்களின் படியும், வாதிக்கோ, அவருக்கு கிரையம் கொடுத்தாக பிரஸ்தாபிக்கும் தேவராஜ் பாண்டியனுக்கோ எவ்வித உரிமையும் தாவா சொத்தில் இல்லை என்பது நிரூபணமாகிறது என்றும், தாவா வழக்கு Barred by Limitation என்ற தோஷத்தால் தடைபட்டுள்ளது என்றும், தாவா சீர்திருத்தத மனுவின் மூலம் Null and Void பரிகாரம் கோர மனுதாருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே தாவா மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-

**4.1.** அசல் வழக்கானது வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து தனக்கு தனிப்பட்ட அனுபவத்தில்

இருந்து வருவதாகவும், தாவா சொத்தை பொறுத்து வாதியாகிய தனக்கு Prescriptive Title தனது அனுபவத்தை பிரதிவாதிகள் தொந்தரவு செய்வதாகவும், எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.2.** அதற்கு மறுப்பு தெரிவித்து, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோருரிமையில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், புலஎண்.128/3C என்பது மாரநாடு கிராம கண்மாய் உலகமடை பாசனத்தில் சர்வே எண்.128/3 ஆக இருந்து வந்து மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 93 செண்டும் ஆறுமுகம் சேர்வையால் செல்லையாபிள்ளையிடம் 20.04.1965 ம் தேதியன்று ஆவண எண்.271/1965 என்ற எண்ணில் ரூ.2000/க்கு ஒத்தி வைத்து, பின்பு 24.10.1968 தேதியன்று ஆவண எண்.2650/1968 என்ற எண்ணில் ரூ200/–க்கு மேல் ஒத்தியாக வைத்து அனுபவம் செய்து வந்து, பின்பு செல்லையாபிள்ளை ஆவண எண்.1671/1973 என்ற எண்ணில் ரூ.2200/–ஐ ஒத்தி மேடோவர் பெற்றுக் கொண்டு இராமாயி என்பவரிடம் மேல் ஒத்தி வைத்துள்ளார் என்றும், பிறகு இராமாயி என்பவர் ராஜம்மாளுக்கு அதே ஒத்தி தொகை ரூ.2200/க்கு ஒத்தி மேடோவரை ஆவண எண்.1195/1978 என்ற எண்ணில் பதிவு செய்துகொடுத்து ராஜம்மாள் அனுபவம் செய்து வந்து, மேற்படி இராஜம்மாளிடமிருந்து 1, 2 பிரதிவாதிகள் ஒத்தி மேடோவரை மீட்புகை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

**4.3**. இந்நிலையில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்கோருரிமையின் அடிப்படையில் மேற்படி நான்கு ஒத்தி பத்திரங்களும் பெயரளவில் உள்ளது என்றும், அது நடைமுறைக்கு வரவில்லை என்றும், சொத்தின் சுவாதீனத்தை எடுத்து ஒத்திதாரர் அனுபவம் செய்யவில்லை என்றும், எனவே ஒத்தி நடைமுறைக்கு வராததால் 20.04.1965 தேதிய ஒத்திபத்திரமும், 24.10.1968 தேதிய மேல் ஒத்திபத்திரமும், 01.08.1973 தேதிய ஒத்தி மேடோவர் பத்திரமும், 31.08.1978 தேதிய ஒத்தி மேடோவர் பத்திரமும் மேற்படி 4 ஒத்தி பத்திரங்களும் (Null & Void) செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது ஏற்புடையதாகவே உள்ளது.

**4.4.** ஏனெனில் மேற்படி ஒத்தி ஆவணங்களின் அடிப்படையில் தங்களுக்கு சொத்தில் உரிமைமூலம் ஏற்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பு கட்சி அமைந்துள்ளது.

**4.5.** அதேசமயம் மேற்படி 4 ஒத்தி ஆவணங்களும் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள் என்று வாதி தரப்பு கட்சி அமைந்துள்ளது.

**4.6**. இந்நிலையில் அசல் வழக்கானது Bare Injunction Suit ஆக இருந்தாலும், இவ்வழக்கில் மேற்படி 4 ஒத்தி ஆவணங்களும் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா அல்லது உண்மையில் சட்டப்படி சொத்துரிமை மாற்றம் நடந்ததா என்பதை இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் அந்த ஆவணங்கள் செல்லுமா, இல்லையா என்பதை முடிவு செய்தால் தான் இவ்வழக்கில் சரியான முறையில் நீதி வழங்க இயலும் என்று' இந்நீதிமன்றம் கருதுகிறது.

**4.7.** இவ்வழக்கில் பிரதிவாதிகள் எதிர்கோருரிமையினால் கட்சி செய்யப்பட்டுள்ளநிலையில் , அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிப்படைந்துள்ளதா என்பது போன்ற விசயங்களை பொறுத்து இவ்வழக்கில் எழுவினாக்கள் வனைந்து தான் முடிவு செய்ய இயலும்.

**4.8.** மேலும் தரப்பினர்களுக்கிடையே வழக்குகள் பெருகுவதை (**Multiplicity of Proceedings**) தவிர்க்கும் பொருட்டும், இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**4.9.** மனுதாரர் தான் கேட்கும் பரிகார திருத்தத்திற்கு ஏற்ப கணக்கிட்டு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்று மனுதாரர்/வாதிக்கு உத்தரவிடப்படுகிறது.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு செப்டம்பர் 26ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் **என்னால் அவையறிய பகரப்பட்டது.**

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.09.26 18:25:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**மானாமதுரை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.09.26 18:25:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.2/2025**

**in**

**OS 10/2021**

**Order**

**Dated 26.09.2025**